23 அக்டோபர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 30 ஆம் ஞாயிறு
(மறைத்தூது ஞாயிறு)

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:

**செபமாலை அன்னையின் தினம் (07-10-2022)**



# நீங்கள் என் சாட்சிகளாய் இருப்பீர்கள்

உலக மறைத்தூது ஞாயிறு 1926 ஆம் ஆண்டு திருத்தந்தை 11 ஆம் பத்திநாதர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் அகில உலக கத்தோலிக்கர்கள் அனைவரும் நற்செய்தியை அனைவருக்கும் பகிரவேண்டும் என்ற பொறுப்பை நினைவுகூரும் வகையில் அனைத்துலக ஒருமைப்பாட்டு விழாவாக கொண்டாடப்படுகிறது. (அமெரிக்க ஆயர்களின் மாநாடு)

இந்த ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'நீங்கள் என் சாட்சிகளாய் இருப்பீர்கள்' (திப:1:8) என்னும் கருப்பொருளைத் தேர்ந்தெடுத்துள்ளார். அவருடைய முக்கிய உரையில், ஒவ்வொரு கிறிஸ்தவரும் தூதுரைக்கவும், சாட்சிகளாகத் திகழவும் அழைக்கப்பட்டுள்ளனர். மேலும் திருஅவை, கிறிஸ்துவின் சீடர்களின் சமூகம் இரண்டுக்கும் கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பது, அனைவருக்கும் நற்செய்தியை அறிவிப்பது ஆகியவற்றைத் தவிர வேறு எந்தப் பணியும் இல்லை. தூதுரைப்பது தான் திருஅவையின் அடையாளம்.

'தூதுரைப்பதில், கிறிஸ்தவ வாழ்க்கையின் முன்மாதிரியும், கிறிஸ்துவை அறிவிப்பதும் பிரிக்கமுடியாதவை' என்று திருத்தந்தை மேலும் கூறுகிறார். ஒருவர் மற்றவருக்குப் பணிசெய்யத் தயார்நிலையில் இருக்கவேண்டும்.

நாம் அனைவரும் தூதுரைக்க அழைக்கப்பட்டுள்ளோம். யாரும் இதைத் தவிர்க்கமுடியாது. நாம் அவரின் சாட்சிகளாக இருக்கவேண்டுமென்ற ஆண்டவரின் அழைப்பை நாம் நினைவுகூரும்போது, நற்செய்தியிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?

திருப்பாடல் 34 தாவீது அரசரின் பாடல். சவுல் தாவீதைக் கொல்லத் தேடிக்கொண்டிருந்தார். சவுலுக்குப் பதிலாக தாவீது அரசராக அருள்பொழிவு செய்யப்பட்டிருந்தார். ஆனால் தாவீது சவுலிடமிருந்து தப்பி ஓடினார். அச்சத்துடன் தன்நிலை இழந்ததுபோல் நடித்துக்கொண்டிருந்தார். இந்த நிலையில் அவர் கூறியது: 'இந்த ஏழை கூவியழைத்தான்; ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்' அதன்பின் தாவீது இஸ்ராயேலுக்கு அரசராகவும் கடவுளுக்கு நம்பிக்கையுள்ள சாட்சியாகவும் மாறினார்.

தாவீதின் அழுகை நம்முடைய அழுகை அல்லவா? உதவியற்று அழும் அந்த நிலையில் நாம் மோசமானவற்றையும் நம்முடைய முடிவு இதுதான் என்றும் நம்பிக்கொண்டிருக்கிறோம்.

இருந்தபோதும், ஒரு பாவி மனம்திரும்புவதை கடவுள் அறிவார். சீராக் 35 இல் அவர்களுடைய மன்றாட்டு முகில்களை எட்டும் என்று கூறப்பட்டுள்ளது. நாம் பாவம் அல்ல என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். கடவுள் பாவங்களைக் ஒதுக்கி, பாவிகள் தம்மிடம் வரும்போது மன்னிக்கிறார். மனம் திரும்பிய பாவிகள் பலரும் மிகப்பெரிய சாட்சிகளாகத் திகழ்கிறார்கள்.

பவுல் தம்முடைய கடிதத்தில் (2 தீமோ: 4) தம்முடைய பணிவாழ்வின் இறுதிக்கட்டத்தில் வருத்தம் நிறைந்த இதயத்தை வெளிப்படுத்துகிறார். தம் வாழ்நாளின் இறுதிவரை ஒரு நம்பகமான கிறிஸ்துவின் சாட்சியாக, அவர் விளங்கினார்.

நமக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பின்படி நாம் வாழ முயற்சி செய்யும்போது, வழிதவறிப்போகும்போது, கடவுளையும் அவரின் இரக்கத்தையும் அணுகிச் செல்ல நாம் அச்சம் கொள்ளக்கூடாது. கிறிஸ்துவின் சீடர்களாக மாற, நாம் உழைக்கும்போது, பெருமை நம்மை தடுக்காதவாறு வரிதண்டுபவரின் தாழ்ச்சி நமக்கு ஒரு பாடமாக அமையட்டும் ❖

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

...எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றா.

(திப: 1:8)

**இன்றைய வாசகங்கள்:**

சீராக்: 35: 12-14, 16-18;

திபா: 34: 2-3, 17-19, 23;

2 தீமோத்தேயு 4: 6-9, 16-18;

லூக்கா: 18: 9-14.

INTERNAL CIRCULATION ONLY
BUL 43/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org